**தூய ஆவி திருவிழிப்பு ஆராதனைப்பெருவிழா**
**18-05-2024 - 19-05-2024**
**Herz Jesu Kirche, Hünefeldstraße 52**
**42285 Wuppertal**
**www.tamilcatholicdaily.com**

**பாடல் தலைப்புகள்**

**19:00 - 19:45**
1. ஆராதனை ஆராதனை
2. ஐயா உம் பிரசன்னம்

**19:45 - 20:00**
3. நன்றி நன்றி நன்றி நன்றி
4. எனது நிழலாய்

**20:10 - 20:20**
5. ஆவியான தேவனே அசைவாடுமே
6. யாதொன்றும் குறையில்லை

**20:40 - 20:50**
7. நெஞ்சுக்குள்ளே வாரும்

**21:00 - 21:10**
8. நான் நானாகவே

**21:28 - 21:38**
9. வானம் திறந்து

**21:47 - 21:57**
10. வழிகாட்டும் என் தெய்வமே

**22:07 - 22:17**
11. ஆண்வரின் வாக்கு

**22:37 - 22:47**
12. ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை

**23:15 - 23:30**
13. வந்தருளும் வந்தருளும் ஆவியாரே
14. விண்ணப்பத்தை கேட்டருளும்

**23:50 - 00:05**
15. ஆவியானவரே தூய ஆவியானவரே
16. ஆண்டவரை நம்பி

**00:25 - 00:40**
17. ஆவியாரே ஆவியாரே
18. என்னில் எழுந்த இயேசுவுக்கே

**01:10 - 01:25**
19. அப்பா இயேசுவே
20. சொந்தம் என்று சொல்லிக்கொள்ள

**01:45 - 02:00**
21. ஆவியானவரே நிறைவாய்
22. என்றென்றும் அற்புதம்

**02:30 - 02:45**
23. என் இதயத்தின் காயத்தை
24. ஆவியான தேவனே அசைவாடுமே

**03:05 - 03:20**
25. அல்லேலூயா அல்லேலூயா
26. போற்றுவேன் இயேசுவே

**03:55 - 04:10**
27. அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
28. போற்றுங்கள் ஆண்டவரை

**04:30 - 04:45**
29. அருங்கொடை நாயகரே
30. என்கூடவே இரும்

**05:05 - 05:20**
31. மாண்புயர்
32. அருட்திரு தேவதேவன் பொற்றி

**05:30 - 06:30**
33. இதயம் மகிழும் நன்நாள் இதுவே
34. நீரே என் புகலிடம்
35. இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
36. எந்தன் உயிரே நீதான் இயேசுவே
37. இந்த நாளினை தந்த இறைவா
38. பிள்ளைகளாய் உந்தன் பாதம்

**01. ஆராதனை ஆராதனை**

ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை-2
நல்லவரே ஆராதனை
வல்லவரே ஆராதனை
தூயவரே ஆராதனை
பரிசுத்தரே ஆராதனை
உன்னதரே ஆராதனை
உற்றவரே ஆராதனை
காண்பவரே ஆராதனை
காப்பவரே ஆராதனை
வாருமே தூய ஆவியே
வந்தென்னை முழுமையாய் ஆட்கொள்ளுமே
வாருமே தூய ஆவியே
வல்லமையால் என்னை நிரப்பிடுமே
பரிசுத்தரே அன்புள்ளவரே
என் தந்தைக்கே ஆராதனை
பரிசுத்தரே அருள்நிறைந்தவரே
இயேசுவுக்கே ஆராதனை
பரிசுத்தரே என் துணையாளரே
தூய ஆவிக்கே ஆராதனை
ஆராதனை ஆராதனை
இயேசுவுக்கே ஆராதனை - 2
அப்பாவுக்கே ஆராதனை
தூய ஆவிக்கே ஆராதனை - (என்) 2
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை-2

இயேசுவே வாருமே எனக்குள் வாருமே
இப்பவே வாருமே உந்தன் ஆவியால் நிரப்பிடுமே
தந்தையே வாருமே தகப்பனே வாருமே
இப்பவே வாருமே உந்தன் ஆவியால் நிரப்பிடுமே
உந்தன் அன்பைச் சுவைத்திடவே - 2
உந்தன் சாயலாய் மாறிடவே - 2
நான் முழுமையாய் மாறிடவே - 2
உந்தன் சாட்சியாய் வாழ்ந்திடவே- 2
உலகெங்கும் சென்றிடவே - 2
உந்தன் நற்செய்தி அறிவிக்கவே - 2
உந்தன் ஆவியால் நிரப்பிடுமே - 2
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை - 10

**02. ஐயா உம் பிரசன்னம்**

ஐயா உம் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும் - 2

உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது
வாளினும் கூர்மையானது - 2
சிந்தனையை சீர் தூக்கி பார்க்க வல்லது - 2
உன் வார்த்தையே உன் வார்த்தையே
ஐயா உம் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

விண்ணும் அழியலாம் மண்ணும் மறையலாம்
வாழ்வின் செல்வம் எல்லாம் அழியலாம் - 2
வான் மழை போல் பயன் தராமல்
திரும்புவதில்லை - 2
உன் வார்த்தையே உன் வார்த்தையே
ஐயா உம் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

தெய்வீகமே மனுவுரு எடுத்தார்
என் வாழ்வில் குடிகொண்டாரே - 2
ஆன்மாவை அழியாமல் ஆட்கொள்ளுமே - 2
உன் வார்த்தையே உன் வார்த்தையே

ஐயா உம் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும் - 2
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

**03. நன்றி நன்றி நன்றி நன்றி**

நன்றி நன்றி நன்றி நன்றி என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன்
ஹாலேலூயா ஹாலேலூயா என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன் - 4

நல்லவரே வல்லவரே எந்தன் இயேசுவே
உம்மை ஸ்தோஸ்தரித்து துதித்திடுவேன்
தூயவரே பரிசுத்த எந்தன் இயேசுவே
உம்மை எந்தாளும் துதித்துடுவேன் {2}
என் வாழ்நாளெல்லாம் செய்த நன்மைக்காக
நன்றி என்று பாடிடுவேன் - 2
நன்றி நன்றி நன்றி நன்றி என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன்
ஹாலேலூயா ஹாலேலூயா என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன் - 4

உன்னதரே உத்தமரே எந்தன் இயேசுவே
உம்மை ஸ்தோஸ்தரித்துத் துதித்திடுவேன்
கருணையின் ஆண்டவரே எந்தன் இயேசுவே
உம்மை எந்நாளும் துதித்திடுவேன் {2}
என் வாழ்நாளெல்லாம் செய்த நன்மைக்காக
நன்றி என்று பாடிடுவேன் - 2
நன்றி நன்றி நன்றி நன்றி என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன்
ஹாலேலூயா ஹாலேலூயா என்று பாடுவேன்
என் இயேசுவே உம்மைத் துதிப்பேன் - 4

**04. எனது நிழலாய்**

எனது நிழலாய் தொடரும் உறவாய் என்னைக்
கண்டு கொண்டாய்
வாழ்வு முழுதும் விலகிடாமல் என்னிலே
இணைந்தாய்
உயிரின் உயிரே வா எந்தன் நினைவாய் வா - 2
நாளும் பொழுதும் என்னைத் தேடி - 2
நீயும் உடனிருந்தாய் - 2
எனது நிழலாய் தொடரும் உறவாய் என்னைக்
கண்டு கொண்டாய்
வாழ்வு முழுதும் விலகிடாமல் என்னிலே
இணைந்தாய்

இதயம் எழுப்பும் ஓசை கூட உனது உள்ளம்
அறிந்திடும் இமைகள் மூடும் ஒலியை கூட
உனது உணர்வும் புரிந்திடும் {2}
உந்தன் வருகை எந்தன் வாழ்வில் வளமை
என்றும் தந்திடும் - 2
பாதை தெரிந்தே விலகினாலும் - 2
கரங்கள் தானே காத்திடும் உன் கரங்கள் தானே
காத்திடும்
எனது சொந்தம் நீயே ஆனால் எனது சுமைகள்
மாறிடும்
எனது பலமே நீயே ஆனால் எனது பயமும்
மாறிடும்
எனது நிழலாய் தொடரும் உறவாய் என்னைக்
கண்டு கொண்டாய்
வாழ்வு முழுதும் விலகிடாமல் என்னிலே
இணைந்தாய்

பூவை போல மென்மையாக என்னைத் தாங்கி
நின்றாய் வாசம் நல்கும் சுவாசமாக என்னில் நீ
கலந்தாய் {2}
அன்பே உனது விருந்தில் நாளும் புதிய ஆற்றல்
காண்கிறேன் - 2
அருளை தந்து வாழ்வில் இணைந்தால் -2
புதுமையாகி போகின்றேன் -2
எனது வரமே நீயே ஆனால் எனது கவலை
மாறிடும்
எனது ஜீவன் நீயே ஆனால் எனது வாழ்வும்
மாறிடும்
எனது நிழலாய் தொடரும் உறவாய் என்னைக்
கண்டு கொண்டாய்
வாழ்வு முழுதும் விலகிடாமல் என்னிலே
இணைந்தாய்
உயிரின் உயிரே வா எந்தன் நினைவாய் வா - 2
நாளும் பொழுதும் என்னைத் தேடி - 2
நீயும் உடனிருந்தாய் - 2
எனது நிழலாய் தொடரும் உறவாய் என்னைக்
கண்டு கொண்டாய்
வாழ்வு முழுதும் விலகிடாமல் என்னிலே
இணைந்தாய்

**05. ஆவியான தேவனே அசைவாடுமே**

ஆவியான தேவனே அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே ஆட்கொள்ளுமே - 2
வாரும் ஆவியே தூய ஆவியே - 4
ஆவியான தேவனே அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே ஆட்கொள்ளுமே

தெய்வீக அக்கினியே இறங்கி வாருமே
உம் திருக்கரத்தின் வல்லமையை
பொழிந்திடுமையா - 2
திருக்கரத்தின் வல்லமையை பொழிந்திடுமையா-2
ஆவியான தேவனே அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே ஆட்கொள்ளுமே

ஆன்மாவின் ஆத்மாவே
அன்பின் ஆவியே
என் சுவாசமாக என்னோடு தங்கிடுமையா - 2
சுவாசமாக என்னோடு தங்கிடுமையா - 2
ஆவியான தேவனே அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே ஆட்கொள்ளுமே

**06. யாதொன்றும் குறையில்லை**

யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க - 2

இருள்சூழ் பள்ளத்தாக்கில் இறைவா
நான் நடக்க நேர்ந்தாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

பலபேர் பழிபாவம் இறைவா
என்மீது சொன்னாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

நான் நம்பும் நண்பர்களும் எனக்கு
எதிரிகள் ஆனாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

நன்மைக்குப் பதிலாக எனக்கு
தீமைகள் வந்தாலும்- 2

எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க - 3

**07. நெஞ்சுக்குள்ளே வாரும்**

நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே
கண்ணுக்குள்ளே வாரும் எந்தன் ஜீவனே-2
தேனான உன் நினைவில் தேடி வரும் சங்கீதமே
பாடாத நாவும் உன்னைப் பாடவே -2
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே
கண்ணுக்குள்ளே வாரும் எந்தன் ஜீவனே
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே

தீராத ஆவல் உன்னைத்
தேடச் சொல்லுதே - 3
வாராத உந்தன் வாசல்
நாடச் சொல்லுதே -3
இமைகளில் இருந்து நீ சுமைகள் தாங்கும்
சொந்தமாகினாய்
அகத்தினில் அமைதியை தந்திடும் எந்தன்
தந்தையாகினாய்
உன்னை தேடும் உள்ளம் ஒட்டிக்கொள்ளும்
உன்னிலே உன்னை பாடும் உள்ளம் வாழும் இந்த
மண்ணிலே-2
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே
கண்ணுக்குள்ளே வாரும் எந்தன் ஜீவனே
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே

வானத்தின் மழைத்துளி
மண்ணைத் தேடுதே -3
ஞானத்தின் இறைமொழி
விண்ணைத் தேடுதே -3
மேகமாய் திரண்டு நீ அருளைப் பொழியும்
அண்ணலாகினாய்
தேகமாய் வந்து நீ தெவிட்டா உணவின்
சுவையாகினாய்
உன்னை தேடும் உள்ளம் ஒட்டிக்கொள்ளும்
உன்னிலே உன்னை பாடும் உள்ளம் வாழும் இந்த
மண்ணிலே - 2

நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே
கண்ணுக்குள்ளே வாரும் எந்தன் ஜீவனே-2
தேனான உன் நினைவில் தேடி வரும் சங்கீதமே
பாடாத நாவும் உன்னைப் பாடவே -2
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே
கண்ணுக்குள்ளே வாரும் எந்தன் ஜீவனே
நெஞ்சுக்குள்ளே வாரும் எந்தன் இயேசுவே

**08. நான் நானாகவே**

நான் நானாகவே வந்திருக்கிறேன்
உம் பிரசன்னத்தில் வந்து நிற்கிறேன்
நீர் இன்று என்னை ஏற்றுக் கொள்வீரா
உம் ராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வீரா..

யோசேப்பை போல் நான் ஒழுங்கில்லையே
நோவாவைப் போல் நீதி மானும் இல்லையே
ஆப்ரகாமைப் போல் விசுவாசியில்லையே
தானியேலைப் போல் உம்மை
வேண்டவில்லையே
நான் நானாக நானாக வந்திருக்கிறேன்
நான் நானாகவே வந்திருக்கிறேன்
உம் பிரசன்னத்தில் வந்து நிற்கிறேன்
நீர் இன்று என்னை ஏற்றுக் கொள்வீரா
உம் ராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வீரா..

மார்த்தாளைப் போல் உம்மை சேவிக்கலையே
மரியாளைப் போல் உம்மை நேசிக்கலையே
எஸ்தரை போல் எதையும் செய்யவில்லையே
எலிசபெத்தின் நற்குணங்கள் என்னில் இல்லையே
நான் வீணாகி பாழாகி வந்திருக்கிறேன்
நான் நானாகவே வந்திருக்கிறேன்
உம் பிரசன்னத்தில் வந்து நிற்கிறேன்
நீர் இன்று என்னை ஏற்றுக் கொள்வீரா
உம் ராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வீரா..

**09. வானம் திறந்து**

வானம் திறந்து வெண்புறா போல
இறங்கி வரவேண்டும்
தேவா வல்லமை தரவேண்டும்(2) - 2
ஜோர்தான் நதிக்கரை அனுபவங்கள்
அப்படியே இன்று நடக்கனுமே - 2
அப்படியே இன்று நடக்கனுமே
(வானம் திறந்து)

மறுபடியும் நான் பிறக்க வேண்டும்
மறுரூபமாக மாறவேண்டும் - 2
ஜோர்தான் நதிக்கரை அனுபவங்கள்
அப்படியே இன்று நடக்கனுமே - 2
அப்படியே இன்று நடக்கனுமே
(வானம் திறந்து)

வரங்கள் கனிகள் பொழியனுமே
வல்லமையோடு வாழனுமே - 2
ஜோர்தான் நதிக்கரை அனுபவங்கள்
அப்படியே இன்று நடக்கனுமே - 2
அப்படியே இன்று நடக்கனுமே
( வானம் திறந்து)

**10. வழிகாட்டும் என் தெய்வமே**

வழிகாட்டும் என் தெய்வமே...
துணையாக எனில் வாருமே... - 2
நதிமீது அலைந்தாடும் அகல் போலவே
கதியேதும் தெரியாமலே
நான் தடுமாறும் நிலை பாருமே

அன்பாகி அருளாகி என்னோடு ஒன்றாகி
துயரோடு போராடும் என் வாழ்வின் நலனாகி
எனைத் தாங்கும் என் தெய்வமே
என் நிழலாக எழும் தெய்வமே
வழிகாட்டும் என் தெய்வமே...
துணையாக எனில் வாருமே...

எந்நாளும் உனைத்தேடும் வரம் கேட்கிறேன்
உன்பாத நிழல் நாடும் மனம் கேட்கிறேன்

நீரின்றியே மண்ணில் வளமில்லையே
நிலமின்றியே உயிர் வாழ்வில்லையே

எந்நாளும் உனைத்தேடும் வரம் கேட்கிறேன்
உன்பாத நிழல் நாடும் மனம் கேட்கிறேன்
எனைக்காக்கும் என் தெய்வமே
என் உயிராக எழும் தெய்வமே

நிலவெங்கும் ஒளிர்ந்தாலும் விழிமூடிப் பயனேது
துயர் மூடும் மனமுந்தன் அருள் காணும்
வகையேது
பலனாக கைமீது வா
இங்கு புலனாகும் இறையாக வா
வழிகாட்டும் என் தெய்வமே.... துணையாக எனில்
வாருமே....

என் பாதை முடிவாகும் உன் தாளிலே
என் வாழ்வு விடிவாகும் அந்நாளிலே

உன் வார்த்தைகள் என் வாழ்வாகுமோ
உன் பார்வைகள் என் வழியாகுமோ

என் பாதை முடிவாகும் உன் தாளிலே
என் வாழ்வு விடிவாகும் அந்நாளிலே
இருள் நீக்கும் விளக்காகவே
நான் சுடர்வீச எனை ஏற்றவா

ஆல்போல வளர்ந்தாலும் ஆரம்பம் முளைதானே
விண்வாழ்வின் உயர்வெல்லாம் இவ்வாழ்வில்
பலன்தானே
நிறைவாழ்வின் விதையாகவே
எங்கள் நிலவாழ்வு பயன் காணவா

வழிகாட்டும் என் தெய்வமே....
துணையாக எனில் வாருமே.... - 2
நதிமீது அலைந்தாடும் அகல் போலவே
கதியேதும் தெரியாமலே
நான் தடுமாறும் நிலை பாருமே - 3

**11. ஆண்வரின் வாக்கு**

ஆண்டவரின் வாக்கு என் பாதை விளக்கு
ஆண்டவரின் வாக்கு என் வாழ்வின் மீட்பு - 2
உயிருள்ள வாக்கு ஆற்றல்மிகு வாக்கு
வலுவூட்டும் வாக்கு வாழ்வாகும் வாக்கு - 2
ஆண்டவரின் வாக்கு என் பாதை விளக்கு
ஆண்டவரின் வாக்கு என் வாழ்வின் மீட்பு

தீயவழி எதிலும் நான் கால் வைப்பதில்லை
பொன் வெள்ளி எதிலும் என் மனம்
போவதில்லை-2
பொய்வார்த்தை எதுவும் என்வாய்
சொல்வதில்லை உன் நியமங்களைவிட்டு
நெறிபிறழ்வது இல்லை -2
ஏனெனில் உன் வார்த்தை வழிகாட்டும் - 2
ஆண்டவரின் வாக்கு என் பாதை விளக்கு
ஆண்டவரின் வாக்கு என் வாழ்வின் மீட்பு - 2

துன்பமும் கவலையும் தினந்தோறும் உண்டு
தீயவரின் கண்ணிகள் திசை தோறும் உண்டு - 2
சதிசெய்து வீழ்த்துவோர் என் அருகில் உண்டு
வஞ்சகத்தின் நாவுகள் எனைச்சுற்றி உண்டு - 2
ஆயினும் நீரே என் பாதுகாப்பு - 2
ஆண்டவரின் வாக்கு என் பாதை விளக்கு
ஆண்டவரின் வாக்கு என் வாழ்வின் மீட்பு - 2
உயிருள்ள வாக்கு ஆற்றல்மிகு வாக்கு
வலுவூட்டும் வாக்கு வாழ்வாகும் வாக்கு - 2
ஆண்டவரின் வாக்கு என் பாதை விளக்கு
ஆண்டவரின் வாக்கு என் வாழ்வின் மீட்பு

**12. ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை**

ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை
மரியே வாழ்கவே.. - 2
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை
மரியே வாழ்கவே.. - 2

தூயவரை துணையாக நாடுங்கள்
ஆவியில் நிறைந்திருங்கள்
இறைவார்த்தையை அனுதினம் கேளுங்கள்
அதன்படி நடந்திடுங்கள் - {2}
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஹல்லேலூயா ஹல்லேலூயா
யாருக்குக் கற்றுத்தருவார்
எனக்குத்தான் கற்றுத்தருவார் யாருக்குக்
கற்றுத்தருவார் - இயேசு
உனக்கும்தான் கற்றுத்தருவார்
ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை
மரியே வாழ்கவே.. - 2

நற்செய்தி அறிவிக்கச் செல்லுங்கள்
அறுவடை மிகுதி என்றாரே
உலகெங்கும் ஓடிப்போய்ச் சொல்லுங்கள் -
இயேசு சீக்ரம் வருவாரென்றே - {2}
ஹல்லேலூயா ஹல்லேலூயா
ஹல்லேலூயா ஹல்லேலூயா
யாரை அனுப்பிடுவார்
என்னைத்தானே அனுப்பிடுவார்
யாரை அனுப்பிடுவார் - இயேசு
உன்னைத்தானே அனுப்பிடுவார்

ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை
மரியே வாழ்கவே.. - 2
ஆராதனை ஆராதனை - 4
ஹல்லேலூயா ஹல்லேலூயா - 4
ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை
மரியே வாழ்கவே.. - 2

**13. வந்தருளும் வந்தருளும் ஆவியாரே**

வந்தருளும் வந்தருளும் ஆவியாரே
வந்தருளும் வந்தருளும் தூயவரே
என்மீது அக்கினியாய் இறங்கிடும்
உம் அருளாசீரால் என்னை நிரப்பிடும் (2) - 2

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - 6

பெந்தக்கோஸ்து நாளைப்போல இன்றும்
வல்லமையைப் பொழிந்திட வேண்டும்
கனவுகள் கண்டிட வேண்டும்
காட்சிகள் கண்டிட வேண்டும்
உம் ஆவியினால் உம் அபிஷேகத்தால் எம்மீது
வந்தருள வேண்டும் - 2
வந்தருளும் வந்தருளும் ஆவியாரே
வந்தருளும் வந்தருளும் தூயவரே
என்மீது அக்கினியாய் இறங்கிடும்
உம் அருளாசீரால் என்னை நிரப்பிடும் - 2

இளைஞர் மீது இறங்கிட வேண்டும்
முதியோர் மீதும் இறங்கிட வேண்டும்
இறைவாக்கு உரைத்திட வேண்டும்
புதிய மொழிகள் பேசிட வேண்டும்
உம் ஆவியினால் உம் அபிஷேகத்தால் எம்மீது
வந்தருள வேண்டும் - 2
வந்தருளும் வந்தருளும் ஆவியாரே
வந்தருளும் வந்தருளும் தூயவரே
என்மீது அக்கினியாய் இறங்கிடும்
உம் அருளாசீரால் என்னை நிரப்பிடும் - 2

ஆவியினால் திருமுழுக்குப் பெற்று
நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டும்

பேய்களை ஓட்டிட வேண்டும்
நோய்களை நீக்கிட வேண்டும்
உம் ஆவியினால் உம் அபிஷேகத்தால் எம்மீது
வந்தருள வேண்டும் - 2
வந்தருளும் வந்தருளும் ஆவியாரே
வந்தருளும் வந்தருளும் தூயவரே
என்மீது அக்கினியாய் இறங்கிடும்
உம் அருளாசீரால் என்னை நிரப்பிடும் - 2
உம் இரக்கத்தால் என்னை நிரப்பிடும் - 2
உம் கனிகளால் என்னை நிரப்பிடும் - 2
உம் கொடைகளால் என்னை நிரப்பிடும் - 2

**14. விண்ணப்பத்தை கேட்டருளும்**

விண்ணப்பத்தை கேட்டருளும்
விண்ணில் வாழும் இயேசு தேவா - 2
வா தேவா.. வா தேவா..
வா தேவா.. வா தேவா..
என் மனக் கோவிலில் வா தேவா - 2
விண்ணப்பத்தை கேட்டருளும்
விண்ணில் வாழும் இயேசு தேவா

அப்பா பிதாவே அன்பான தேவா
மனிதர்கள் குறை நீக்கும் ஆண்டவரே - 2
அன்பான தெய்வமே..
அன்பான தெய்வமே ஆவியை தாரும்
ஆவியின் வல்லமையால் நிறைத்தருளும் - 2
விண்ணப்பத்தை கேட்டருளும்
விண்ணில் வாழும் இயேசு தேவா - 2

துன்பம் துயரங்கள் போக்கிடவே
மனிதரே ஆண்டவரை துதித்திடுங்கள் - 2
ஆவியில் புதுப் படைப்பாகிடவே..
ஆவியில் புதுப் படைப்பாகிடவே
முழுமனதோடு துதித்திடுங்கள் - 2
விண்ணப்பத்தை கேட்டருளும்...
விண்ணில் வாழும் இயேசு தேவா - 2
வா தேவா.. வா தேவா..
வா தேவா.. வா தேவா..
என் மனக் கோவிலில் வா தேவா - 2
விண்ணப்பத்தை கேட்டருளும்..
விண்ணில் வாழும் இயேசு தேவா
வா தேவா.. வா தேவா..
வா தேவா.. வா தேவா..
என் மனக் கோவிலில் வா தேவா - 2

**15. ஆவியானவரே தூய ஆவியானவரே**

ஆவியானவரே தூய ஆவியானவரே - 2
காற்றின் வடிவில் என்னைத் தழுவும்
நீரின் வடிவில் என்னைக் கழுவும்
நெருப்பின் வடிவில் என்னில் படரும்
ஆவியானவரே தூய ஆவியானவரே

ஆவியானவரே தூய ஆவியானவரே - 2

விண்ணக வாசல் திறந்து வாரும் ஆவியானவரே
வெண்புறாபோல் பறந்து வாரும் ஆவியானவரே
{2}
வரங்கள் கனிகள் கொடைகள் தாரும்
ஆவியானவரே
அபிஷேகத்தால் இறைபணி செய்ய சக்தியைத்
தாருமே
ஆவியானவரே தூய ஆவியானவரே - 2

பெந்தக்கோஸ்து நாளின் அனுபவம் பகிர்ந்திட
வேண்டும்
வல்லமையோடு சாட்சிய வாழ்வு வாழ்ந்திட
வேண்டும் - {2}
உலக மாந்தர் யாவர் மேலும் பொழிந்திடும்
அருளை
கனவுகள் காட்சிகள் இறைவாக்குரைக்கும்
ஆற்றல் தாருமே
ஆவியானவரே தூய ஆவியானவரே - 2
காற்றின் வடிவில் என்னைத் தழுவும்
நீரின் வடிவில் என்னைக் கழுவும்
நெருப்பின் வடிவில் என்னில் படரும்
ஆவியானவரே தூய ஆவியானவரே

ஆவியானவரே தூய ஆவியானவரே - 2

**16. ஆண்டவரை நம்பி**

ஆண்டவரை நம்பி எந்நாளும் வாழ்வேன்
ஒருபோதும் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்
ஆண்டவரின் அன்பில் என்றுமே வாழ்வேன்
ஒருநாளும் ஒருநாளும் விலகிட மாட்டேன் - {2}
அவரே என்னை வழி நடத்துவார்
அவரே என்றும் என்னைத் தாங்குவார்
அவரே புத்துயிர் அளிக்கின்றார்
இயேசுவே என்முன்னே நடக்கிறார்
ஆண்டவரை நம்பி எந்நாளும் வாழ்வேன்
ஒருபோதும் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்
ஆண்டவரின் அன்பில் என்றுமே வாழ்வேன்
ஒருநாளும் ஒருநாளும் விலகிட மாட்டேன்

சோதனை என்னை சூழ்ந்து கொண்டாலும்
தன் தோளில் என்னை சுமந்திடுவார்
தீயைப்போல தீமைகள் பற்றிக் கொண்டாலும்
அக்கினியால் விடுவிப்பார்
நோய்கள் தினம் என்னை வதைத்தாலும்
மெய்யாக பிணிகளைத் தாங்கிடுவார்
அவமான நிலையில் நான் நின்றாலும்
தம் சிறகுக்குள் அணைத்துக் கொள்வார்
இயேசுவே என்முன்னே நடக்கிறார்
என்னோடு எந்நாளும் இருக்கிறார் - 2
ஆண்டவரை நம்பி எந்நாளும் வாழ்வேன்
ஒருபோதும் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்
ஆண்டவரின் அன்பில் என்றுமே வாழ்வேன்
ஒருநாளும் ஒருநாளும் விலகிட மாட்டேன்

குடும்பத்தில் குழப்பங்கள் வந்தபோதும்
அமைதியின் தூதனாய் என்னில் வருவார்
குழப்பத்தில் உறவுகள் பிரிந்தாலும்
தன் அன்பினால் ஒன்று சேர்ப்பார்
மரணம் என் குடும்பத்தை ஆட்கொண்டாலும்
உறவுகள் அனைத்தையும் இழந்தாலும்
உள்ளம் உடைந்து நான் அழுதாலும்
தன் கரத்தால் அரவணைப்பார்
இயேசுவே என்முன்னே நடக்கிறார்
என்னோடு எந்நாளும் இருக்கிறார் - 2
ஆண்டவரை நம்பி எந்நாளும் வாழ்வேன்
ஒருபோதும் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்
ஆண்டவரின் அன்பில் என்றுமே வாழ்வேன்
ஒருநாளும் ஒருநாளும் விலகிட மாட்டேன் - {2}
அவரே என்னை வழி நடத்துவார்
அவரே என்றும் என்னைத் தாங்குவார்
அவரே புத்துயிர் அளிக்கின்றார்
இயேசுவே என்முன்னே நடக்கிறார்
ஆண்டவரை நம்பி எந்நாளும் வாழ்வேன்
ஒருபோதும் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்
ஆண்டவரின் அன்பில் என்றுமே வாழ்வேன்
ஒருநாளும் ஒருநாளும் விலகிட மாட்டேன்

**17. ஆவியாரே ஆவியாரே**

ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே

ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே - {2}
உன்னை நான் சுவைத்திட வேண்டும்
ஆவியால் நிரம்பிட வேண்டும்
கனிகளும் கொடைகளும் வேண்டும்
வல்லமை நிலைத்திட வேண்டும் - {2}
ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே

கல்லான நெஞ்சத்தை எடுத்துவிடு
கனிவுள்ள நெஞ்சத்தை கொடுத்துவிடு
ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
தீய எண்ணத்தை எடுத்துவிடு
அன்பு உள்ளத்தை கொடுத்துவிடு
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே
உன்னை நான் சுவைத்திட வேண்டும்
ஆவியால் நிரம்பிட வேண்டும்
கனிகளும் கொடைகளும் வேண்டும்
வல்லமை நிலைத்திட வேண்டும் - {2}
ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே

ஜெபத்தின் ஆவியைப் பொழிந்து இறைவனை
ஸ்துதிக்க என்னைத் தூண்டிவிடு
ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
அக்கினி வல்லமை எனக்குள் இறங்கி ஜெபத்தின்
ஜெயத்தைக் காட்டிவிடு
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே
உன்னை நான் சுவைத்திட வேண்டும்
ஆவியால் நிரம்பிட வேண்டும்
கனிகளும் கொடைகளும் வேண்டும்
வல்லமை நிலைத்திட வேண்டும் - {2}
ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே

ஆவியாரே ஆவியாரே
அன்பின் எங்கள் தூயவரே
ஆவியாரே ஆவியாரே
அக்கினியாய் இறங்கிடுமே
உன்னை நான் சுவைத்திட வேண்டும்
ஆவியால் நிரம்பிட வேண்டும்
கனிகளும் கொடைகளும் வேண்டும்
வல்லமை நிலைத்திட வேண்டும் - {2}
ஆவியாரே ஆவியாரே
உந்தன் அக்கினி இறங்கிடவே - 2
என்னை முழுமையாய் மாற்றிடுமே - 2

## 18. என்னில் எழுந்த இயேசுவுக்கே

என்னில் எழுந்த இயேசுவுக்கே
ஆராதனை ஆராதனை - 2
நன்மைகள் செய்த இராஜாவுக்கே
நன்றி நன்றி நன்றி பலி - 2
என்னில் எழுந்த இயேசுவுக்கே
ஆராதனை ஆராதனை

எம்மாவு ஊரிலே அப்பத்தை உடைத்து கண்கள்
திறந்தவரே
பார்வை வேண்டும் உம்மைப் பார்க்க
உயிருள்ள உந்தன் பலிதனிலே - {2}
ஆராதனை ஆராதனை - 2
என்னில் எழுந்த இயேசுவுக்கே
ஆராதனை ஆராதனை
நன்மைகள் செய்த இராஜாவுக்கே
நன்றி நன்றி நன்றி பலி

கானாவு ஊரிலே தண்ணீரை எடுத்து திராட்சை
இரசமாக்கினீர்
குறையுள்ள என் வாழ்வை ஏற்பீரையா
சுவையுள்ள இரசமாய் மாற்றிடுவீர் - {2}
ஆராதனை ஆராதனை - 2
என்னில் எழுந்த இயேசுவுக்கே
ஆராதனை ஆராதனை - 2
நன்மைகள் செய்த இராஜாவுக்கே
நன்றி நன்றி நன்றி பலி - 2
ஆராதனை ஆராதனை - 2

## 19. அப்பா இயேசுவே

அப்பா இயேசுவே நீங்க இருக்கீங்க
ஒரு போதும் எனக்கு சோர்வில்ல
அம்மா இயேசுவே நீங்க இருக்கீங்க
மார்பில் சுமந்து எனை தேற்றுவீங்க - {2}
எனக்கு பயமில்ல எனக்கு பயமில்ல
அப்பா என் கூட இருக்கீங்க
பயமும் எனக்கில்ல பயமும் எனக்கில்ல
அம்மா என்னை அணைத்து கொள்வீங்க
அப்பா இயேசுவே நீங்க இருக்கீங்க
ஒரு போதும் எனக்கு சோர்வில்ல
அம்மா இயேசுவே நீங்க இருக்கீங்க
மார்பில் சுமந்து எனை தேற்றுவீங்க

பசியாய் இருந்தேன் பசியாய் இருந்தேன்
(தன்) இரத்தத்தை பாலாக்கி பசியை தீர்த்தீங்க
தோளிலே சுமந்து மார்பிலே அணைத்து
அரவணைத்து சுமந்துகொண்டு காத்து வந்தீங்க {2}
எனக்கு பயமில்ல எனக்கு பயமில்ல
அப்பா என் கூட இருக்கீங்க
பயமும் எனக்கில்ல பயமும் எனக்கில்ல
அம்மா என்னை அணைத்து கொள்வீங்க
அப்பா இயேசுவே நீங்க இருக்கீங்க
ஒரு போதும் எனக்கு சோர்வில்ல
அம்மா இயேசுவே நீங்க இருக்கீங்க
மார்பில் சுமந்து எனை தேற்றுவீங்க

நடந்து வந்தீங்க நடந்து வந்தீங்க
கால்மிதித்த இடமெல்லாம் கூட வந்தீங்க
உதவி செய்தீங்க உதவி செய்தீங்க
நான் இடறி விழுந்த வேளையெல்லாம் தூக்கி
விட்டீங்க - {2}
எனக்கு பயமில்ல எனக்கு பயமில்ல
அப்பா என் கூட இருக்கீங்க
பயமும் எனக்கில்ல பயமும் எனக்கில்ல
அம்மா என்னை அணைத்து கொள்வீங்க
அப்பா இயேசுவே நீங்க இருக்கீங்க
ஒரு போதும் எனக்கு சோர்வில்ல
அம்மா இயேசுவே நீங்க இருக்கீங்க
மார்பில் சுமந்து எனை தேற்றுவீங்க - {2}
எனக்கு பயமில்ல எனக்கு பயமில்ல
அப்பா என் கூட இருக்கீங்க
பயமும் எனக்கில்ல பயமும் எனக்கில்ல
அம்மா என்னை அணைத்து கொள்வீங்க
அப்பா இயேசுவே நீங்க இருக்கீங்க
ஒரு போதும் எனக்கு சோர்வில்ல
அம்மா இயேசுவே நீங்க இருக்கீங்க
மார்பில் சுமந்து எனை தேற்றுவீங்க

**20. சொந்தம் என்று சொல்லிக்கொள்ள**

சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல

சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல
இயேசுவே இயேசுவே எல்லாம் இயேசுவே
இயேசுவே இயேசுவே
எனக்கெல்லாம் இயேசுவே
சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல

உம் தழும்புகளால் நான் சுகமானேன்
உம் வார்த்தையினால் நான் பெலனானேன்
பெலனானேன் பெலனானேன் -2
சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல

உம் கிருபையினால் நான் பிழைத்துக்
கொண்டேன் உம் பாசத்தினால் நான் திகைத்துப்
போனேன்
திகைத்துப் போனேன் திகைத்துப் போனேன் - 2
சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல

**21. ஆவியானவரே நிறைவாய்**

ஆவியானவரே நிறைவாய் வரவேண்டும்
அக்கினி அபிஷேகம் நிறைவாய் தரவேண்டும் - 2

வேதனை தாங்கியெழும் வலிமை தரவேண்டும் - 2
சிறகுகளால் அணைத்து தொடர்ந்து நடத்த
வேண்டும் - 2
ஆவியானவரே நிறைவாய் வரவேண்டும்
அக்கினி அபிஷேகம் நிறைவாய் தரவேண்டும்

பகைமையை வேரறுக்க
பரிவைத் தர வேண்டும் - 2
தோள்களில் தாங்கி எம்மை
தொடர்ந்து நடத்த வேண்டும் - 2
ஆவியானவரே நிறைவாய் வரவேண்டும்
அக்கினி அபிஷேகம் நிறைவாய் தரவேண்டும் - 2

**22. என்றென்றும் அற்புதம்**

என்றென்றும் அற்புதம் செய்பவரே
என்றென்றும் விடுதலை தருபவரே
எந்நாளும் நன்மை செய்பவரே
என்னோடு என்றும் இருப்பவரே (2) - 2
ஹல்லேலூயா ஹல்லேலூயா - 4

புயல்காற்று வந்தாலும் நிலநடுக்கம் வந்தாலும்
என்னைக் காப்பவரே - 2
என்மேல் அன்பு வைத்தவரே
எனக்காய் யுத்தம் செய்பவரே - 2
என்றென்றும் அற்புதம் செய்பவரே
என்றென்றும் விடுதலை தருபவரே
எந்நாளும் நன்மை செய்பவரே
என்னோடு என்றும் இருப்பவரே (2)

உந்தன் மகனாய்(மகளாய்) அழைத்ததினால்
அன்பை என்மீது பொழிந்ததினால் - 2
தோத்திரம் உமக்கு தோத்திரமே
வாழ்நாள் எல்லாம் தோத்திரமே - 2
என்றென்றும் அற்புதம் செய்பவரே
என்றென்றும் விடுதலை தருபவரே
எந்நாளும் நன்மை செய்பவரே
என்னோடு என்றும் இருப்பவரே (2) - 2
ஹல்லேலூயா ஹல்லேலூயா - 4

**23. என் இதயத்தின் காயத்தை**

என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா - 2 கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா

யோவானைப்போல உன்மார்பிலே
இளைப்பாற வேண்டும் ஐயா - 2
கரைகாணா படகைப்போல தடுமாறும் வாழ்க்கை
ஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா

பெலவீனமான என்னையும் - உம்
பலத்தால் இடைகட்டுவீர் - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா -2
என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா

காணாமல்போன ஆடுநான்
அன்போடு தேடினீரே - 2 கரைகாணா
படகைப்போல தடுமாறும் வாழ்க்கை ஐயா - 2
என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா - 2 கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன்
இயேசையா

**24. ஆவியானவரே அல்லல் அகற்றிடும்**

ஆவியானவரே அல்லல் அகற்றிடும் அருட்சுடரே
அகம் அளிப்பவரே அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா
அருளொளி வீசுமையா - 2

நீதானே உலகுக்கு உரு கொடுத்தாய்
நீதானே மண்ணுக்கும் உயிர் கொடுத்தாய் - 2
நீதானே தீமைகளை தகற்றெறிந்தாய் - 2
நீதானே நன்மைகளை வளர்த்தெடுத்தாய்
உன்னைப்போல் ஒரு தெய்வம் இல்லையே
உன்னைப் பிரிந்தாலோ வாழ்வும் இல்லையே - 2
ஆவியானவரே அல்லல் அகற்றிடும் அருட்சுடரே
அகம் அளிப்பவரே அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா
அருளொளி வீசுமையா

காற்றாக நெருப்பாக உணரச் செய்தாய்
நாவாக புறாவாக உருவெடுத்தாய்-2
இறையாட்சிப் பணிக்காக எனைத் தெரிந்தாய் - 2
இணையற்ற பேரின்பம்
எனில் நிறைத்தாய்

எனைத் தருகிறேன் தூய ஆவியே என்னை
ஏற்பாயோ அன்பின் ஆவியே - 2
ஆவியானவரே அல்லல் அகற்றிடும் அருட்சுடரே
அகம் அளிப்பவரே
அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா அருளொளி வீசுமையா

**25. அல்லேலூயா அல்லேலூயா**

அல்லேலூயா அல்லேலூயா - 4
அல்லேலூயா அல்லேலூயா - 4
அல்லேலூயா அல்லேலூயா - 4

அக்கினியாம் ஆவியே
பரிசுத்த ஆவியே - 2
அக்கினியாய் எங்கள்
மேல் இறங்கிடுமே - 2
அல்லேலூயா அல்லேலூயா - 4

வல்லமையாம் ஆவியே
பரிசுத்த ஆவியே - 2
வல்லமையாய் எங்கள்
மேல் இறங்கிடுமே - 2
அல்லேலூயா அல்லேலூயா - 4

ஜீவ ஊற்றாம் ஆவியே
பரிசுத்த ஆவியே - 2
ஜீவ ஊற்றாய் என்னில் பொங்கிடுமே - 2
அல்லேலூயா அல்லேலூயா - 4
அல்லேலூயா அல்லேலூயா - 4

**26. போற்றுவேன் இயேசுவே**

போற்றுவேன் இயேசுவே போற்றுகின்றேன்
உம்மைப் போற்றுகின்றேன்
புகழ்கின்றேன் இயேசுவே புகழ்கின்றேன்
நன்றி என்று சொல்வேன்- 2

இதயத்தில் இருப்பவரே
எந்தன் இதயத்தில் வாழ்பவரே
உள்ளத்தில் நிறைந்தவரே
எந்தன் உள்ளத்தில் நிறைந்தவரே
துதியும் மகிமையும் தோத்திரமும்
உமக்கே ஆண்டவரே - 2
போற்றுவேன் இயேசுவே போற்றுகின்றேன்
உம்மைப் போற்றுகின்றேன்
புகழ்கின்றேன் இயேசுவே புகழ்கின்றேன்
நன்றி என்று சொல்வேன்

ஜெபங்களைக் கேட்பவரே
எங்கள் ஜெபங்களைக் ஏற்பவரே
பதில் தரும் பரிசுத்தரே
எமக்கு பதில் தரும் பரிசுத்தரே
துதியும் மகிமையும் தோத்திரமும்
உமக்கே ஆண்டவரே - 2
போற்றுவேன் இயேசுவே போற்றுகின்றேன்
உம்மைப் போற்றுகின்றேன் - 2
புகழ்கின்றேன் இயேசுவே புகழ்கின்றேன்
நன்றி என்று சொல்வேன் - 2
துதியும் மகிமையும் தோத்திரமும்
உமக்கே ஆண்டவரே - 4

**27. அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா**

அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
தீநாவாய் வந்து விட்டால்
எங்கள் தீமை எல்லாம் அகன்று விடும் - 2

ஜீவநதி பாய்ந்திடட்டும்
என் தெய்வமே பெருக்கெடுத்து ஓடிடட்டும் - 2
அக்கினியே அக்கினியே அக்கினியே அக்கினியே-2
அக்கினி அக்கினி அக்கினி அக்கினியே - 4
அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
தீநாவாய் வந்து விட்டால்
எங்கள் தீமை எல்லாம் அகன்று விடும்

சாபம் எல்லாம் மாறிடட்டும்
என் தெய்வமே புதுவாழ்வு மலர்ந்திடட்டும் - 2
அக்கினியே அக்கினியே அக்கினியே அக்கினியே-2
அக்கினி அக்கினி அக்கினி அக்கினியே - 4
அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
தீநாவாய் வந்து விட்டால்
எங்கள் தீமை எல்லாம் அகன்று விடும்

இருள் எல்லாம் அகன்றிடட்டும்
என் தெய்வமே புதுஒளி பிறந்திடட்டும் - 2
அக்கினியே அக்கினியே அக்கினியே அக்கினியே-2
அக்கினி அக்கினி அக்கினி அக்கினியே - 4
அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
தீநாவாய் வந்து விட்டால்
எங்கள் தீமை எல்லாம் அகன்று விடும்

பழையன களைந்திடட்டும்
என் தெய்வமே புதுஜீவன் உண்டாகட்டும் - 2
அக்கினியே அக்கினியே அக்கினியே அக்கினியே-2
அக்கினி அக்கினி அக்கினி அக்கினியே - 4
அக்கினியானவரே தீநாவாய் வாருமப்பா
தீநாவாய் வந்து விட்டால்
எங்கள் தீமை எல்லாம் அகன்று விடும்

**28. போற்றுங்கள் ஆண்டவரை**

போற்றுங்கள் ஆண்டவரை
வாழ்த்துங்கள் அவர் பெயரை
பாடுங்கள் அவர் புகழை
மகிழுங்கள் நினைத்து அவர் செயலை
அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் - 2
போற்றுங்கள் ஆண்டவரை
வாழ்த்துங்கள் அவர் பெயரை..

உயர்ந்த இரக்கம் உள்ளவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
அளவற்ற மேன்மை மிகுந்தவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
சொற்களைக் கடந்த வல்லவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
மக்கள் புகழுக்கு உரியவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
போற்றுங்கள் ஆண்டவரை
வாழ்த்துங்கள் அவர் பெயரை
பாடுங்கள் அவர் புகழை
மகிழுங்கள் நினைத்து அவர் செயலை
அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் - 2

வியத்தகு செயல் பல செய்பவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
அச்சம் மிகுந்த செயலோனை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
சினம் கொள்ள தாமதம் செய்பவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
நன்மையைப் பொழியும் ஊற்றவரை
வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
போற்றுங்கள் ஆண்டவரை
வாழ்த்துங்கள் அவர் பெயரை
பாடுங்கள் அவர் புகழை

மகிழுங்கள் நினைத்து அவர் செயலை
அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் - 3

**29. அருங்கொடை நாயகரே**

அருங்கொடை நாயகரே
என்னை ஆட்கொள்ளும் ஆவியாரே..
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா! உந்தன் சித்தம்
போல் நடத்துமையா -2
ஆட்கொள்ள வா என்னை ஆட்கொள்ள வா..
அணலாய் தணலாய்
உருமாற்ற வா - 2
அணலாய் தணலாய் உருமாற்ற வா.
அருங்கொடை நாயகரே என்னை ஆட்கொள்ளும்
ஆவியாரே
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா - உந்தன் சித்தம்
போல் நடத்துமையா.

படைப்பினை ஆட்கொண்டு உயிர் அளித்தீர்
தண்ணீரில் அசைவாடி புனிதம் தந்தீர்- 2
என்னையும் ஆட்கொள்ள வாருமையா
என்னையும் ஆட்கொள்ள வாருமையா
ஆட்கொள்ள வா என்னை ஆட்கொள்ள வா..
அணலாய் தணலாய்
உருமாற்ற வா - 2
அணலாய் தணலாய் உருமாற்ற வா.
அருங்கொடை நாயகரே என்னை ஆட்கொள்ளும்
ஆவியாரே
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா! உந்தன் சித்தம்
போல் நடத்துமையா.

யோர்தானில் வெண்புறாவாய் இறங்கி வந்தீர்
இயேசுவை ஆட்கொண்டு உறுதி தந்தீர் - 2
என்னையும் ஆட்கொள்ள வாருமையா
என்னையும் ஆட்கொள்ள வாருமையா
ஆட்கொள்ள வா என்னை ஆட்கொள்ள வா
அணலாய் தணலாய்
உருமாற்ற வா- 2
அணலாய் தணலாய் உருமாற்ற வா.
அருங்கொடை நாயகரே என்னை ஆட்கொள்ளும்
ஆவியாரே
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா! உந்தன் சித்தம்
போல் நடத்துமையா.

அக்கினியாய் பெந்தக்கோஸ்து நாளில் வந்தீர்
அன்னையையும் சீடரையும் ஆட்கொண்டீர் - 2
என்னையும் ஆட்கொள்ள வாருமையா!
என்னையும் ஆட்கொள்ள வாருமையா.
ஆட்கொள்ள வா என்னை ஆட்கொள்ள வா
அணலாய் தணலாய்
உருமாற்ற வா - 2
அணலாய் தணலாய் உருமாற்ற வா
அருங்கொடை நாயகரே என்னை ஆட்கொள்ளும்
ஆவியாரே
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா! உந்தன் சித்தம்
போல் நடத்துமையா.
ஆட்கொள்ள வா என்னை ஆட்கொள்ள வா
அணலாய் தணலாய்
உருமாற்ற வா - 2
அணலாய் தணலாய் உருமாற்ற வா.
அருங்கொடை நாயகரே என்னை ஆட்கொள்ளும்
ஆவியாரே
தெய்வீக ஒளியால் தெவிட்டாத மொழியால்
என்னை இன்று நிரப்பும் ஐயா! உந்தன் சித்தம்
போல் நடத்துமையா

**30. என்கூடவே இரும்**

என் கூடவே இரும்
ஓ.. இயேசுவே
நீரில்லாமல் நான் வாழ முடியாது
என் பக்கத்திலே இரும்
ஓ.. இயேசுவே
நீரில்லமால் நான் வாழ முடியாது -2

இருளான வாழ்க்கையிலே
வெளிச்சம் ஆனீரே
உயிரற்ற வாழ்க்கையிலே
ஜீவன் ஆனீரே -2
என் வெளிச்சம் நீரே
என் ஜீவனும் நீரே
எனக்கெல்லாமே நீங்கதானப்பா - 2
என் கூடவே இரும்
ஓ.. இயேசுவே
நீரில்லாமல் நான் வாழ முடியாது

கண்ணீர் சிந்தும் நேரத்தில் நீர் தாயுமானீரே
காயப்பட்ட நேரத்தில் நீர் தகப்பனானீரே -2
என் அம்மாவும் நீரே
என் அப்பாவும் நீரே எனக்கெல்லாமே
நீங்கதானப்பா -2
என் கூடவே இரும்
ஓ.. இயேசுவே
நீரில்லாமல் நான் வாழ முடியாது

வியாதியின் நேரத்தில் வைத்தியரானீரே
சோதனை நேரத்தில் நண்பரானீரே -2
என் வைத்தியர் நீரே
என் நண்பரும் நீரே
எனக்கெல்லாமே நீங்கதானப்பா -2
என் கூடவே இரும்
ஓ.. இயேசுவே
நீரில்லாமல் நான் வாழ முடியாது
நீரில்லாமல் நான் வாழ முடியாது -2

**31. மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை**

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும்..
இனி மறைந்து முடிவு பெறுக - புதிய
நியம முறைகள் வருக
புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின்
உதவி பெறுக

பிதா அவர்க்கும் சுதன் இவர்க்கும் புகழ்ச்சியோடு
வெற்றியார்ப்பும் மீட்பின் பெருமை
மகிமையோடு..
வலிமை வாழ்த்து யாவுமாக
இருவரிடமாய் வருகின்றவராம்
தூய ஆவியானவர்க்கும் அளவில்லாத சம
புகழ்ச்சி என்றென்றுமே உண்டா..க
இனிய நல்தேவன் வாழ்கவே ..

**32. அருட்திரு தேவதேவன் போற்றி**

அருட்திரு தேவ தேவன் போற்றி!

அவர்தம் திரு நாமம் போற்றி!
அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி!
அவர்தம் திரு அன்பே போற்றி!
அருட்திரு தூய ஆவி போற்றி!
அவர்தம் திரு தியானம் போற்றி!

அருட்திரு அன்னை மரியாள் போற்றி!
அவர்தம் திரு தூய்மை போற்றி!
அருட்திரு சூசை முனியும் போற்றி!
அவர்தம் திரு வாய்மை போற்றி!

அருட்திரு தூதர் அமரர் போற்றி!
அவர்தம் திரு சேவை போற்றி!
அருட்திரு தேவதேவன் போற்றி!
அவர்தம் திரு நாமம் போற்றி!!!

**33. இதயம் மகிழும் நன்நாள் இதுவே**

இதயம் மகிழும் நன்நாள் இதுவே
இறைகுலமே விரைந்து சென்றிடுவோம் - 2
வரங்கள் மிகவே தரும் திருப்பலியில்
கரங்கள் குவித்து நன்றி கூறிடுவோம்
நன்றி பாடுவோம் நாளிது
அருள் பொழிந்திடும் பலியிது
விரைவாய் வருவோம் பலியில் இணைவோம்
நன்றிப் பாக்களால் புகழ்வோம் - 2
இதயம் மகிழும் நன்நாள் இதுவே
இறைகுலமே விரைந்து சென்றிடுவோம்

காலம் முழுதும் நம்மைக் காக்கும் தேவன்..
அழைக்கின்றார் - 2
கால்கள் இடறாமல் தோளில் சுமப்பவர்
அழைக்கின்றார் - 2
வாதை அணுகாது வாழவைத்தவர்
அழைக்கின்றார் - 2
புதுப்பாதை எங்கும் புதுப்பார்வை தந்தவர்
அழைக்கின்றார் - 2
இதழ் நன்றி சொல்ல
மனம் அன்பில் துள்ள
அவர் ஆலய வாசல் நுழைந்திடுவோம்
என்றும் சாட்சியாய் வாழ்ந்திட விழைந்திடுவோம்
நன்றி பாடிடும் அருள் பொழிந்திடும் பலியிது
விரைவாய் வருவோம் பலியில் இணைவோம்
நன்றிப் பாக்களால் புகழ்வோம் - 2
இதயம் மகிழும் நன்நாள் இதுவே
இறைகுலமே விரைந்து சென்றிடுவோம்

அழைப்பினைத் தந்து நம்மை நிலைக்கச்
செய்தவர்
அழைக்கின்றார் - 2
களைப்பினை அகற்றி உழைக்கச் செய்தவர்
அழைக்கின்றார் - 2
உறவுகள் தந்து மனநிறைவை அளித்தவர்
அழைக்கின்றார் - 2
உயர்வுகள் தந்து என்றும் உவகை அளிப்பவர்
அழைக்கின்றார் - 2
நெஞ்சம் நன்றி சொல்ல
தஞ்சம் நீயே என்று
ஆனந்தமாக நுழைந்திடுவோம்
என்றும் அன்பின் கீதங்கள் முழங்கிடுவோம்
நன்றி பாடுவோம் நாளிது
அருள் பொழிந்திடும் பலியிது
விரைவாய் வருவோம் பலியில் இணைவோம்
நன்றிப் பாக்களால் புகழ்வோம் - 2
இதயம் மகிழும் நன்நாள் இதுவே
இறைகுலமே விரைந்து சென்றிடுவோம் - 2
வரங்கள் மிகவே தரும் திருப்பலியில்
கரங்கள் குவித்து நன்றி கூறிடுவோம்
நன்றி பாடுவோம் நாளிது
அருள் பொழிந்திடும் பலியிது
விரைவாய் வருவோம் பலியில் இணைவோம்
நன்றிப் பாக்களால் புகழ்வோம் - 2
இதயம் மகிழும் நன்நாள் இதுவே
இறைகுலமே விரைந்து சென்றிடுவோம்..

**34. நீரே என் புகலிடம்**

நீரே என் புகலிடம் நீரே என் அரண் நீரே என்
நம்பிக்கை என் ஆண்டவரே - 2
உமை நான் நம்பி என்றும் வாழ்கிறேன்
நீரே என்கதி என்று வாழ்கிறேன் -2
நீரே என் புகலிடம்..

இருளில் உலவும் எந்த
கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படேன் பயப்படேன்
பகலில் தாக்கும் எந்த கொடிய வாதைக்கும் நான்
அஞ்சிடேன் அஞ்சிடேன் - {2}
உமை நான் நம்பி என்றும் வாழ்கிறேன்
நீரே என்கதி என்று வாழ்கிறேன் - 2
நீரே என் புகலிடம்..

எந்த வாதையும் வீட்டை நெருங்காது
காத்திடுவீர் காத்திடுவீர்
செல்லும் இடமெல்லாம் என்னை காத்திட
பணித்தீரே பணித்தீரே-2
உமை நான் நம்பி என்றும் வாழ்கிறேன்
நீரே என்கதி என்று வாழ்கிறேன் -2
நீரே என் புகலிடம்..

உம்மை நோக்கி நாங்கள் ஜெபிக்கும் வேளையில்
பதிலளிப்பீர் பதிலளிப்பீர்
துன்ப வேளையில் எங்களோடு தங்கி
தப்புவிப்பீர் தப்புவிப்பீர் -2
உமை நான் நம்பி என்றும் வாழ்கிறேன்
நீரே என்கதி என்று வாழ்கிறேன் -2
நீரே என் புகலிடம் நீரே என் அரண் நீரே என்
நம்பிக்கை என் ஆண்டவரே - 2
உமை நான் நம்பி என்றும் வாழ்கிறேன்
நீரே என்கதி என்று வாழ்கிறேன் -2
நீரே.. என் புகலிடம்..

**35. இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்**

இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
ஏற்பாய் இறைவா ஏற்றிடுவாய் - 2
மலரும் மணமும் குறையும் நிறையும் - 2
எடுத்து வந்தோம் அர்ப்பணம் தந்தோம் - 2
இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
ஏற்பாய் இறைவா ஏற்றிடுவாய் - 2

வறியோர் வாழ்வும் எளியோர் உழைப்பும்
அளித்தோம் அன்பாய் ஏற்பாயே - 2
பலியின் பொருளாய் பணியில் பலியாய் பகிர்ந்தே
மகிழ்வோம் காணிக்கையாய்
வார்த்தை வாழ்வாக..
எமை திராட்சை இரசமாய் மாற்றிடுமே - 2
உழைப்பின் பயனும் அப்பமும் இரசமும்
உவந்தே ஏற்பாய் அர்ப்பணமே - 2
இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
ஏற்பாய் இறைவா ஏற்றிடுவாய் - 2

பசித்தோர் வாழ்வும் புசித்தோர் உயர்வும்
அளித்தோம் பலியாய் ஏற்பாயே - 2
தியாக வாழ்வில் சுடரும் ஒளியாய்
எம்மையே தருவோம் காணிக்கையாய்
வார்த்தை வாழ்வாக..
எமை கோதுமை மணியாய் மாற்றிடுமே -2
உண்மை அன்பு உறவில் மலர
அளித்தோம் ஏற்பாய் அர்ப்பணமே - 2
இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
ஏற்பாய் இறைவா ஏற்றிடுவாய் - 2
மலரும் மணமும் குறையும் நிறையும் - 2
எடுத்து வந்தோம் அர்ப்பணம் தந்தோம் - 2
இதயம் நிறைந்த காணிக்கை தந்தோம்
ஏற்பாய் இறைவா ஏற்றிடுவாய் - 2

**36. <u>எந்தன் உயிரே நீதான் இயேசுவே</u>**
எந்தன் உயிரே நீதான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2
நான் உன்னை மறந்தாலும்
நீ என்னை மறவாமல் - 2
என் மீது பாசம் கொண்டாய்
என் நெஞ்சில் வாசம் செய்தாய் - 2
எந்தன் உயிரே நீதான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2

கல்வாரி நினைவுகள் தான்..
என் வாழ்வின் வரமாகுமே
உன்னோடு ஒன்றாகினால்..
என் வாழ்வில் வளமாகுமே
உணவாய் எழுந்து எனில் வந்து என் உணர்வாய்
கலந்து உயிர் சுமந்தாய் மெழுகாய் உருகி
ஒளிர்ந்திடவே உனது ஆற்றல் வேண்டுமே
எந்தன் உயிரே நீதான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2

என் வாழ்வின் தேடல்களில்...
வழியாக ஒளியாக வா
என் வாழ்வின் சோகங்களில்...
தாயாகி தாலாட்ட வா
உறவாய் என்னை நீ அணைத்தாய் என் உறவுகள்
இன்று உயிர் பெறுமே
சிலுவைகள் தோளில் நான் சுமக்க
உனது சிறகுகள் வேண்டுமே
எந்தன் உயிரே நீதான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2
நான் உன்னை மறந்தாலும்
நீ என்னை மறவாமல் - 2
என் மீது பாசம் கொண்டாய்
என் நெஞ்சில் வாசம் செய்தாய் - 2
எந்தன் உயிரே நீதான் இயேசுவே
உன்னை மட்டும் சுவாசிப்பேன் - 2

**37. <u>இந்த நாளினை தந்த இறைவா</u>**
இந்த நாளினை தந்த இறைவா
உந்தன் தாழினை நான் தொழுதேன் - 2
நலம் வளம் அருள் செய்தவா
உந்தன் மலர்ப்பதம் சரணடைந்தேன் - 2
நன்றி நன்றி தந்தையே நன்றி - 2

இந்த நாளினை தந்த இறைவா
உந்தன் தாழினை நான் தொழுதேன் - 2
நலம் வளம் அருள் செய்தவா
உந்தன் மலர்ப்பதம் சரணடைந்தேன் - 2
நன்றி நன்றி இயேசுவே நன்றி - 2

இந்த நாளினை தந்த இறைவா
உந்தன் தாழினை நான் தொழுதேன் - 2
நலம் வளம் அருள் செய்தவா
உந்தன் மலர்ப்பதம் ஔசரணடைந்தேன் - 2
நன்றி நன்றி ஆவியே நன்றி - 2

நன்றி நன்றி தந்தையே நன்றி
நன்றி நன்றி இயேசுவே நன்றி
நன்றி நன்றி ஆவியே நன்றி..
நன்றி.. நன்றி.. நன்றி..

**38. <u>மரியன்னை பாடல்</u>**
பிள்ளைகளாய் உந்தன் பாதம்
ஓடி வந்தோம் தாயே
கவலை கண்ணீர் நேரங்களில்
காத்தவளும் நீயே
அதிசயங்கள் கண்டோமே
ஆறுதலும் அடைந்தோமே
மடியில் எங்களை சுமந்ததை உணர்ந்து
கொண்டோமே
எங்கள் நாவாலே புகழுவோம் அன்னையே
தன்னையே தந்த எங்கள் மரியே வாழ்க - 2
உம்மைப் புகழுவோம் போற்றுவோம்
சாட்சிகளாவோம் - 2
பிள்ளைகளாய் உந்தன் பாதம்
ஓடி வந்தோம் தாயே
கவலை கண்ணீர் நேரங்களில்
காத்தவளும் நீயே

மங்காத ஒளியான எம் மீட்பர் தாயே
மன்றாடுவோர் குறை தீர்ப்பவள் நீயே
பாவம் ஏதும் இல்லா வெண்மதி நீயே
உன்பாதம் பணிவோரை ஆதரிப்பாயே
இறைசித்தம் நிறைவேற உன்னை நீ தந்தாய்
புதுவாழ்வின் ஏவாளாய் புவியில் நீ வந்தாய் - 2
காலாலே அலகையை நீ மிரித்தாய்
கடவுளின் திட்டம் நிறைவேற்றினாய்
எங்கள் நாவாலே புகழுவோம் அன்னையே
தன்னையே தந்த எங்கள் மரியே வாழ்க - 2
உம்மைப் புகழுவோம் போற்றுவோம்
சாட்சிகளாவோம் - 2
பிள்ளைகளாய் உந்தன் பாதம்
ஓடி வந்தோம் தாயே
கவலை கண்ணீர் நேரங்களில்
காத்தவளும் நீயே

ஜெபமாலை கரம் ஏந்தி உன்பாதம் வந்தோம்
எம்முள்ளும் சொல்லும் கதை கேளும் அம்மா
துன்பங்கள் எழும்போது வலிமை நீ தருவாய்
துணையாக எம்மோடு என்றும் நீ வருவாய்
துயரோடு அழுகின்ற கண்ணீரைக் காண்பாய்
ஓடோடி வந்து எம்சோகம் தீர்ப்பாய் - 2
கருணை நிறைந்த அன்னையே
காலமெல்லாம் நடத்திடுமே
எங்கள் நாவாலே புகழுவோம் அன்னையே
தன்னையே தந்த எங்கள் மரியே வாழ்க - 2
உம்மைப் புகழுவோம் போற்றுவோம்
சாட்சிகளாவோம் - 2
பிள்ளைகளாய் உந்தன் பாதம்
ஓடி வந்தோம் தாயே
கவலை கண்ணீர் நேரங்களில்
காத்தவளும் நீயே - 2
அதிசயங்கள் கண்டோமே
ஆறுதலும் அடைந்தோமே
மடியில் எங்களை சுமந்ததை உணர்ந்து
கொண்டோமே
எங்கள் நாவாலே புகழுவோம் அன்னையே
தன்னையே தந்த எங்கள் மரியே வாழ்க - 2

உம்மைப் புகழுவோம் போற்றுவோம்
சாட்சிகளாவோம் - 2
பிள்ளைகளாய் உந்தன் பாதம்
ஓடி வந்தோம் தாயே
கவலை கண்ணீர் நேரங்களில்
காத்தவளும் நீயே..